DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

STC No. 703/2022 Crime No. 120/2022 Station: BHAVANI

| | | | |
|---|---|---|---|
| Name | PW5- திரு.எஸ்.ஆர்.விஜயகுமார் | Caste | |
| Father Name | ராஜமாணிக்கம் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 46 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 11.09.2023 |

**எதிரி சந்திரா ஆஜர்.**

**முதல் விசாரணை-**

**1)** நான் பவானி சங்கரகவுண்டன்பாளையத்தில் குடியிருந்துகொண்டு, வழக்கறிஞராக தொழில் செய்து வருகிறேன். கடந்த 24.03.2022 அன்று மதியம் சுமார் 03.00 மணியளவில் பணி நிமித்தமாக பவானி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள மாவட்ட முதன்மை உரிமையியல் நீதிமன்ற அலுவலகத்தில் இருந்தபோது அருகிலிருந்த தலைமை எழுத்தர் அறையில் எழுந்த சத்தத்தை கேட்டு நானும், என்னுடன் இருந்த ராமசாமி என்பவரும் சென்று பார்த்தபோது ஒருவர் தலைமை எழுத்தர் திருமதி.சாந்தியிடம் தகாத வார்த்தைகளில் பேசிக்கொண்டும், அவரிடம் சண்டையிட்டும் அவரை பணி செய்யவிடாமல் தடுத்து கொண்டிருந்தார். நாங்கள் தலைமை எழுத்தர் திருமதி.சாந்தியிடம் யார் அவர், எதற்காக சத்தம் போடுகிறார் என்று கேட்டபோது, 2013 ம் ஆண்டு தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.147/2013 என்ற எண்ணில் உள்ள தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்கில் பல்வேறு மனுக்களை தாக்கல் செய்துள்ளதாகவும், அவர் பெயர் சந்திரா என்றும் தெரிவித்தார்.

2) மேற்படி ஆஜர் எதிரி சந்திரா என்பவர் தொடர்ந்து நீதிமன்ற தலைமை எழுத்தர் அலுவலகத்தில் கூச்சலிட்டுக்கொண்டும், அலுவலர்களை மிரட்டும் தோணியிலும் நடந்து கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த பவானி காவல்துறை உதவி ஆய்வாளர் திரு.குமரேசன் என்பவர் இங்கு இவ்வாறு செய்யக்கூடாது, எதுவா இருந்தாலும் நீதிமன்றத்தில் பேசிக்கொள்ளுங்கள் என்று கூறினார். அவரையும் மிரட்டும் தோணியில் ஆஜர் எதிரி சந்திரா நடந்து கொண்டார். மேற்படி அலுவலகத்தில் நடந்த பிரச்சனைகளை கேள்விபட்டு உரிமையியல் நீதிபதி அவர்கள் அலுவலகத்திற்கு வரும்போது எதிரில் படிக்கட்டில் வந்த ஆஜர் எதிரி சந்திரா நீதிபதியை பார்த்து நீ எல்லாம் ஒழுங்கா வேலை செய்வதில்லை என்றும் மிரட்டும் தோணியில் கூச்சலிட்டார். அருகிலிருந்த உதவி ஆய்வாளர் திரு.குமரேசன் அவர்கள் மேற்படி சந்திராவை அழைத்து சென்றுவிட்டார். பிறகு இது சம்மந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டிருப்பதாக என்னிடம் கூறி 24.04.2022 அன்று உதவி ஆய்வாளர் திருமதி.மகேஷ்வரி அவர்கள் வழக்கு சம்மந்தமாக விசாரணை மேற்கொண்டார்.

**எதிரி தரப்பில் எதிரியால் குறுக்கு விசாரணை-**

**1)** 24.04.2022 அன்று போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் பவானி நீதிமன்றத்தில் உள்ள போர்ட்டிக்கோ பகுதியில் என்னை விசாரித்தார்கள். அந்த இடத்தில் CCTV கேமரா உள்ளதென்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல போலீசார் எப்போது சாட்சி சம்மன் கொண்டு வந்து கொடுத்தார்கள் என்றால் என்னிடம் சாட்சி சம்மனில் கையொப்பம் வாங்கினார்கள், அதில் 07.09.2023 என்று தேதி இடப்பட்டிருந்தது. நான் 11.10.2021 முதல் பவானி, சார்பு நீதிமன்றத்தில் அரசு தரப்பு வழக்கறிஞராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான். இதற்கு முன்னால் அரசு தரப்பு வழக்கறிஞராக பணிபுரிந்தது இல்லை. உரிமையியல் நீதிமன்ற தலைமை எழுத்தர் திருமதி. சாந்தி அவர்களின் அறையில் CCTV கேமராக உள்ளது தெரியுமா என்றால் அங்கு CCTV கேமரா இல்லை. நீதிமன்றத்தில் எந்தெந்த இடங்களில் கேமரா உள்ளதென்றால் நீதிமன்ற முகப்பில் உள்ளது, உள்ளே வரும் அறையில் உள்ளது, நீதிமன்ற அறை மற்றும் வெளியேயும் உள்ளது.

2) இவ்வழக்கில் காவல்துறையினர் தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கையை நான் பார்த்தேனா என்றால் இல்லை. இவ்வழக்கின் குற்ற இறுதி அறிக்கையையும் நான் பார்க்கவில்லை. அ.சா.1 திருமதி.சாந்தி நீதிமன்றத்தில் கொடுத்த முதல் விசாரணை வாக்குமூலத்தை நான் பார்த்தேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் தாக்கல் செய்த CCTV பதிவு காட்சிகளை நான் பார்த்தேனா என்றால் இல்லை. வழக்கறிஞர்கள் திரு.கோடீஸ்வரன், திரு.குமரேசன் ஆகியோர்களை எனக்கு தெரியும். O.S.No.147/2013 வழக்கை பொருத்து எனக்கு எதுவும் தெரியாது. அ.சா.1 திருமதி.சாந்தி என்மீது புகார் கொடுக்க சென்றதை நான் நேரில் பார்த்தேனா என்றால் இல்லை. அ.சா.1 திருமதி.சாந்தியை நீதிமன்ற ஊழியர் திரு.ஈஸ்வரன் என்பவர் மதியம் 02.45 மணிக்கு அழைத்து சென்றதை நான் பார்த்தேனா என்றால் இல்லை. எதிரி 04.25 மணிக்குதான் நீதிமன்ற வளாகத்தில் நுழைந்தார் என்றால் நான் பார்க்கவில்லை.

**மறுவிசாரணை இல்லை.**